www.padippakam.com

# தமிழ் மக்களே அராஜகத்தைத் தோற்கடிக்க அணிதிரளுங்கள்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் போராளிகள் ஆயுதம் தாக்கத் தொடங்கிய காலத்திலிருந்து போராளிகளிடையே ஏற்படும் முரண்பாடுகளைத்தீர்த்துக்கொள்வதற்கு, முரண்படும் போராளிகளைக் கொல்லும் போக்கு இன்று ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவரையும், தோழர்களையும் தேடியலைந்து அழிக்கும் பாசிசப்போக்காக விசுவரூபமெடுத்திருக்கின்றது. இப்போக்கில் நீண்டகாலப்பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் சமீபத்தில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தோழர் சிறீசபாரத்தினத்தையும், தோழர்களையும் முகாம், முகாம்களாகத்தேடியலைந்து கொன்றொழித்துள்ளனர். அப்பாவித்தமிழ்மக்களும் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் தமிழீழ விடுதலை இயக்கத் தோழர்கள் மீதும் இவர்களை ஆதரிக்கும் தமிழ்மக்கள்மீதும் அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்தும் விட்டிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினர் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதை நிறுத்தும்படி தமிழ் மக்கள் வேண்டுகோள் விடுத்தமைக்கமையத் தமிழீழவிடுதலை இயக்கத்தின்மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது புலிகளின் காட்டுமிராண்டித்தன நடவடிக்கை அவர்களால் நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பொய்யும், களவும், ஊழலும், வஞ்சகமும், மோசடியும் சமூகக் கௌரவங்களாக அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட எங்கள் சமுதாய அமைப்பில் எந்த விடுதலை இயக்கம்தான் இந்தச் 'சமூகவிரோத' நடவடிக்கைகளிலிருந்து தப்பிக் கொள்வது சாத்தியமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்று எந்த விடுதலை இயக்கத்திற்குத்தான் தமிழ்மக்கள் நற்சாட்சிப்பத்திரம் வழங்கியிருக்கின்றார்கள்.

முதாலாளித்துவ பொருளாதார அமைப்பின் சீர்கேடுகளான இச்சமூக விரோத நடவடிக்கைகளைத் தோற்கடிப்பதென்பது முதாலாளித்துவப் பொருளாதார அமைப்பை உடைத்தெறிவதால் மட்டுமே சாத்தியமாகும். இதையே அனைத்து இயக்கங்களும் தங்கள் வேலைத்திட்டமாகப் பிரகடனப்படுத்தியிருக்கின்றனவே தவிரச்சமூக விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விடுதலை இயக்கங்களை அழித்தொழிப்பதால்தான் சாத்தியமாகும் என்று பிரகடனப்படுத்தவில்லை.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துள்ள விடுதலை இயக்கங்களின் தவறான போராட்ட நடவடிக்கைகள், கட்சிக்குள் ஜனநாயகமின்மை, அராஜகப்போக்குகள், விடுதலை இயக்கங்களிடையே உருவெடுத்திருக்கும் உட்பூசல்கள், விடுதலை இயக்கங்கள் மேற்கொள்ளும் சமூக விரோத நடவடிக்கைகள் இவற்றால் நம்பிக்கையிழந்து விரக்தியின் கடைக்கோடிக்குச் செல்லும் தமிழ்மக்களுக்கு நம்பிக்கையூட்டிப் போராட்டத்தில் அணிதிரட்டுவதற்கு மாறாகச்சமூக விரோத நடவடிக்கைகளைக் காரணம் காட்டித் தமிழீழவிடுதலை இயக்கத்தின்மீது சிங்கள இராணுவப்பாணியில் மிலேச்சத்தாக்குதல்கள் மேற்கொள்வது தமிழ்மக்களைப் போராட்டத்திலிருந்தும், போராளிகளிடமிருந்தும் அந்நியப்படுத்த முயலும் சிங்கள அரசின் நோக்கங்களை முற்றாக நிறைவேற்றுவதற்காக விடுதலைப்போராளிகள்

படிப்பகம்

www.padippakam.com

என்ற போர்வையில் நடாத்தப்பட்ட காட்டிக்கொடுப்புகளாகும். தமிழீழவிடுதலை இயக்கத்தினுள் பிற்போக்குவாதிகளின் ஊடுருவலுடனும், இயக்கத்தின் தவறான நடவடிக்கைகளுடனும் முரண்பட்டாலும் இயக்கத்தின் தலைவர் தோழர் சிறீ சபாரத்தினமும், போராளிகளும், தமிழீழவிடுதலைப்புலிகளால் குருட்டுத்தனமாகக் கொல்லப்பட்டதை வன்மையாகக்கண்டிக்கின்றோம். தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கும் உரிமையைத் தமிழீழவிடுதலை இயக்கத்தினரிடமிருந்து எவரும் ஆயுத முனையில் தட்டிப்பறித்துவிட முடியாது. அவர்களின் அரசியல் நடவடிக்கைகளை ஆரோக்கியமான முறையில் விமர்சனம் செய்யும் புரட்சிகர அரசியலை மறுத்து அவர்களை அழித்தொழித்துவிடுவதைத்தமிழ்மக்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

தமிழ்பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் வளர்ந்துவரும் போராளிகளைக்கொல்லும் பாசிசப்போக்கைத் தோற்கடிக்கத் தமிழ்மக்கள் அனைவரும் முன்வரவேண்டுகின்றோம்.

**P.L.O.T.**
Postfach - 106
7146 Tamm

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்**

**PEOPLES LIBERATION ORGANIZATION OF TAMILEELAM (GERMAN BRANCH)**

17. Mai 1986

படிப்பகம்